# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 600 106
தொலைபேசி எண் : 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண் 06/2020 நாள் 07.01.2020

நடைபெற்ற 2019 ஆம் ஆண்டு ஊரக உள்ளாட்சி தேர்தல்களில், ஒரு வேட்பாளரின் பெயர் வேட்புமனு தாக்கலுக்கான கடைசி நாள் வரை தொடர்புடைய ஊராட்சியின் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருந்து அவரது வேட்புமனு கூர்ந்தாய்வின்போது ஏற்கப்பட்டு, போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலில் (படிவம் 9) பெயர் சேர்க்கப்பட்டு 19.12.2019 அன்று வெளியிட்ட பின்னர், அவர் போட்டியிடும் ஊராட்சி தொடர்பிலான, சட்டமன்றத் தொகுதி துணை வாக்காளர் பட்டியலில் அந்த வேட்பாளரின் பெயர் நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தொடர்புடைய ஊராட்சிக்கான துணை வாக்காளர் பட்டியலின் நீக்கல் பட்டியலில் இடம் பெற்றிருந்த கீழ்க்காணும் தேர்தலுக்கான வாக்குப்பதிவினை எந்த மாற்றமும் இன்றி நடத்தி முடிக்க வேண்டும் என்றும், வாக்கு எண்ணுகை நாளான 02.01.2020 அன்று அத்தேர்தலுக்கான வாக்குச்சீட்டுக்கள் எண்ணப்படாமல் காலியாக உள்ள வாக்குப்பெட்டியில் வைத்து மூடிமுத்திரையிட்டு கருவூலம் அல்லது சார்நிலைக் கருவூலகங்களில் பாதுகாப்பாக வைத்திருக்க மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

| வ. எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியம் | வ. எண் | பதவி |
|---|---|---|---|---|
| 1. | அரியலூர் | டி.பலூர் | 1. | ஸ்ரீபுரந்தான் கிராம ஊராட்சி வார்டு எண்.1 |
| 2. | கடலூர் | குறிஞ்சிப்பாடி | 2 | கோரணப்பட்டு கிராம ஊராட்சி வார்டு எண்.1 |
| | | குமராட்சி | 3 | வெள்ளூர் கிராம ஊராட்சி வார்டு எண்.5 |
| | | மேல்புவனகிரி | 4 | ஆணைவாரி கிராம ஊராட்சி வார்டு எண்.3 |
| | | மேல்புவனகிரி | 5 | வடதலைக்குளம் கிராம ஊராட்சி வார்டு எண்.1 |
| | | கீரப்பாளையம் | 6 | சி.சாத்தமங்கலம் கிராம ஊராட்சித் தலைவர் |

| வ. எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியம் | வ. எண் | பதவி |
|---|---|---|---|---|
| 3. | திண்டுக்கல் | சாணார்பட்டி | 7 | கூவனூத்து கிராம ஊராட்சி வார்டு எண்.5 |
| 4 | கன்னியாகுமரி | குருந்தன்கோடு | 8 | ஊராட்சி ஒன்றிய வார்டு எண்.5 |
| | | மேல்புறம் | 9 | ஊராட்சி ஒன்றிய வார்டு எண்.9 |
| | | இராஜக்காமங்கலம் | 10 | கணியாகுளம் கிராம ஊராட்சி வார்டு எண்.9 |
| 5 | மதுரை | சேடபட்டி | 11 | இ.கோட்டைப்பட்டி கிராம ஊராட்சி வார்டு எண்.1 |
| | | திருப்பரங்குன்றம் | 12 | நிலையூர் பிட்-1கிராம ஊராட்சி வார்டு எண்.15 |
| 6 | நாமக்கல் | பள்ளிபாளையம் | 13 | களியனூர் கிராம ஊராட்சி வார்டு எண்.6 |
| 7 | இராமநாதபுரம் | முதுகுளத்தூர் | 14 | பெரியஇலை கிராம ஊராட்சி வார்டு எண்.5 |
| 8 | சேலம் | ஓமலூர் | 15 | வெள்ளக்கல்பட்டி கிராம ஊராட்சி தலைவர் |
| | | குளத்தூர் | 16 | நவப்பட்டி கிராம ஊராட்சி தலைவர் |
| 9 | திருவண்ணாமலை | கலசப்பாக்கம் | 17 | எர்ணா மங்கலம் கிராம ஊராட்சி தலைவர் |
| | | பெரணமல்லூர் | 18 | ஆனைப்போகி கிராம ஊராட்சி தலைவர் |
| | | செங்கம் | 19 | ஊராட்சி ஒன்றிய வார்டு எண்.19 |
| | | செங்கம் | 20 | மாவட்ட ஊராட்சி வார்டு எண்.26 |
| | | பெரணமல்லூர் | 21 | ஆனைப்போகி கிராம ஊராடசித் தலைவர் |
| 10 | திருச்சிராப்பள்ளி | புல்லம்பாடி | 22 | ரெட்டிமாங்குடி கிராம ஊராட்சி வார்டு எண்.4 |
| | | தாதையங்கார் பேட்டை | 23 | ஊருடையார்ப்பட்டி கிராம ஊராட்சித் தலைவர் |
| 11 | திருப்பூர் | உடுமலைப்பேட்டை | 24 | பெரியகோட்டை கிராம ஊராட்சி வார்டு எண்.11 |
| 12 | திருவாரூர் | குடவாசல் | 25 | அதம்பார் கிராம ஊராட்சித் தலைவர் |

கிராம ஊராட்சியிலோ, ஊராட்சி ஒன்றியத்திலோ, மாவட்டத்திலோ குடியில்லாமல் இருப்பவர் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994-ன்படி உறுப்பினருக்கான தகுதியற்றவர் ஆவார் என்பதால் மேற்கண்ட நபர்கள் தொடர்புடைய ஊராட்சியில் வசிப்பதை உறுதிசெய்து கொண்டு நிறுத்தி வைக்கப்பட்ட வாக்குகள் அடங்கிய வாக்குப்பெட்டிகளை 08.01.2020 அன்று காலை 9.30 மணிக்கு கருவூலம் அல்லது சார்நிலை கருவூலத்தில் இருந்து தக்க பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையத்திற்கு கொண்டு வந்து வாக்குகளை முறையாக எண்ணி, வாக்கு எண்ணுகை முடிவுற்றவுடன் தேர்தல் முடிவு அறிவிப்பினை வெற்றி பெற்ற வேட்பாளருக்கு அன்றைய நாளிலேயே வழங்க வேண்டும் என்றும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 10.01.2020-க்கு முன்னர் பதவி ஏற்க வேண்டும் எனவும் தொடர்புடைய மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

7/1/2020

மக்கள் தொடர்பு அலுவலர்.